மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

## க.பொ.த (உ/த)ப் பரீட்சை – 2019
## மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

# இந்துநாகரிகம்

வினா - (1) சைவ சித்தாந்தம் கூறும் இறைக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

(அ) இறைவன் உளன் என நிரூபிக்கும் முறைகள்.
(ஆ) இறைவனது இயல்புகள்
(இ) இறைவனும் ஆன்மாவும்

விடைகள் -

(அ) இறைவன் உளன் என நிரூபிக்கும் முறைகள்.

- சைவ சித்தாந்தம் காட்சி, கருதல், உரை எனும் மூவகை பிரமாணங்களை ஏற்று உண்மைப் பொருளை ஆராய்கிறது. குறிப்பாக கருதல் (அனுமானம்) உரை (ஆப்தவாக்கியம்) ஆகிய முறைகளில் இறையுண்மை நிரூபிக்கப்படுகிறது.
- உலகத்தின் உண்மைத் தோற்றத்தினைக் கொண்டு கடவுள் உண்டு என்பதனை நிரூபிக்க அனுமானம் உதவுகிறது, அதாவது பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உள்ளான்.
- படைப்பின் நோக்கத்தினைக் கொண்டு அதாவது ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு வினைகளுக்கேற்ப அவற்றைச் சேர்க்க ஒருவர் வேண்டும். அவரே கடவுள்.
- அனுபூதிபெற்ற தத்துவஞானிகளின் வாக்குகளையும் தேவார, திருவாசகக் கருத்துக்க ளாலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களினாலும் பதி உண்மை நிறுவப்படுகிறது.

(ஆ) இறைவனது இயல்புகள்.

- இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் - அநாதியானவன்.
- இறைவன் அனைத்து உயிர்களுக்கும் உலகங்களுக்கும் தலைவன்
- பதியே மேலான பொருள்.
- ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவர்.
- தத்துவங்களைக் கடந்தவர்.
- இறைவனின் இரு நிலைகள்.
  1) சொரூப நிலை - சிறப்பியல்பு
  2) தடத்த நிலை - பொதுவியல்பு
- குறைபாடுடைய பொருட்களை இனங்காண்பதற்கு ஒரு நிறைவான பொருள் வேண்டும். அவ்வாறு நிறைவான பொருள் எதுவோ அதுவே கடவுள்.

❖ **சொரூப நிலை**

- பதி ஊரிலன், பேரிலன், குணமிலன், குறியிலன், போக்கிலான், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் என எவராலும் சொல்ல முடியாது. இவ்வாறு கருவி கரணங்களுக்கு அப்பாறபட்டு நிற்கும் நிலையைச் சொரூப இலட்சணம் என்பர்.
- இதனைச் சிவப்பிரகாசம் "பல்கலையாகம வேதம் யாவையினுங் கருத்து பதி, பசு, பாசம் தெரித்தல் பதிபரமே....." என வரும் பாடல் மூலம் விளக்குகிறது.

❖ **தடத்த நிலை**

- இறைவன் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய திருவருள் திருமேனியாகக் கொண்டு எழுந்து அருளுவார். இது தடத்த நிலை.
- இந்நிலையில் உருவம், குணம், குறி, செயலும் உடைய மூர்த்தியாக இருப்பார்.
- பதியின் இயல்பு ஞானமும் ஆனந்தமும் ஆகும். இதனை 'சத சித் ஆனந்தம்' என்பர். இம் மூன்றினுள்ளும் இறைவனின் எண் குணங்கள் அடங்கும்.

- என்றுமுள்ள எக்காலத்திலும் ஒரே தன்மையான பொருள் சத், தன்வயத்தனாதல் இதனுள் அடங்கும்.
- சித்தில் தூய உடம்பினனாதல், முற்றுமுணர்தல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை எனும்ஆறு குணங்களும் அடங்கும்.
- ஆனந்தத்தில் வரம்பில் இன்பமுடைமை அடங்கும்.
- இவ்வாறான எண்குணங்கள் இறைவனின் இயல்பைக் கூறுகின்றன.
- இறைவன் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனியைக் கொண்டுள்ளார்.

**(இ) இறைவனும் ஆன்மாவும்.**

- இறைவன் பேரறிவாளன் - ஆன்மாக்கள் சிற்றறிவுடையன.
- இறைவன் சித்து ஆன்மா சதசத்து.
- கடவுளைப் போன்று ஆன்மாவும் அநாதியானது.
- இறைவன் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்பான்.
- தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் ஆன்மாவுக்கு உதவுகிறது. ஆன்மாவுக்குரிய நிலையை ஏற்படுத்தி அவற்றில் மலபாசத்தை ஒழிக்க வீடுபேறு எனும் முத்தியை அருளுவார்.
- இறைவனின் பால் / பக்தி கொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகள் மூலம் முத்தி கிடைக்கும்.
- இறைவன் குரு வடிவமாக வந்து உதவுவார்.
- இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற நிலையில் முத்தி கிடைக்கிறது.
- தீட்சை, சிவனடியார் வழிபாடு ஆகியவற்றாலும் இறைவனோடு ஆன்மா தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது.
- முத்தி நிலையில் இறைவன், ஆன்மா தொடர்பை தாடலை என்ற சொல்லால் சித்தாந்திகள் குறிப்பிடுவர்.

**வினா - (2) இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தினை பின்வரும் தலைப்புக்களில் சுருக்கமாக விளக்குக.**

**(அ) வேதங்களின் அமைப்பு**

**(ஆ) சமய வழிபாடு**

**(இ) தத்துவ சிந்தனைகள்**

**விடைகள் -**

**(அ) வேதங்களின் அமைப்பு**

இந்து சமய மரபில் வேதங்கள் முதல் நூல்களெனப் போற்றப்படுவன. அவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மரபு. வேதம் என்ற சொல் ‘வித்’ என்ற அடியில் இருந்து பிறந்தது. அது அறிவு என்னும் பொருளுடையது. எனவே வேதங்கள் அறிவு நூல் எனக் கொள்ளப்படுகின்றன.

அவை எழுதாமறை, சுருதி, மறை, அபௌருசேயம், சுயம்பு, ஆம்நாயம் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுவன.

ஆரம்பத்தில் இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களும் திரயீ வித்தியா என அழைக்கப்பட்டன. காலப்போக்கில் மாந்திரீகம் சார்ந்த விடயங்களையும் ஏனைய சமூகம் சார்ந்த விடயங்களையும் கூறும் அதர்வ வேதம் நான்காம் வேதமாக இணைந்தது.

வேதங்கள் நான்கு என்பதால் சிறப்பாக சதுர்மறை, சதுர்வேதம் எனப்படலாயின. இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது. யசுர் வேதம் 101 சாகைகளைக் கொண்டு சுக்கில யசுர்வேதம் எனவும், கிருஷ்ணயசுர் வேதம் எனவும் இருபகுதிகளைக் கொண்டது.

சாமவேதப் பாடல்கள் இசையுடன் பாடப்பட்ட பூர்வ ஆர்ச்சிகம், உத்தர ஆர்ச்சிகம் என இரு பிரிவுகள் உண்டு. அதர்வ வேதம் இருபது காண்டங்களைக் கொண்டது.

வேதங்கள் நான்கு பகுதிகளைக் கொண்டவை. சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன. வேதப்பகுதிகள் கர்மகாண்டம், ஞான காண்டம் எனும் இருபகுதிகளில் உள்ளன.

- சங்கிதை - மந்திரங்களின் தொகுப்பு
- பிராமணம் - வேள்விக் கிரியைகளுக்கான விதிகளைக் கூறும்
- ஆரணியகம் - வானப்பிரஸ்தர்களுக்கென இது எழுந்ததாகக் கூறுவர். யாகங்கள் உணர்த்தும் உண்மைகள் பற்றிக் கூறுவர்.
- உபநிடதம் - மெய்ப்பொருள், பிரமம், ஆன்மா, உலகம் பற்றிய தத்துவப் பகுதிகளைக் கொண்டது.

வேதங்கள் சூக்தங்களைக் (பாடல்களை) கொண்டவை. மந்திரங்களெனச் சிறப்பிக்கப்படுவன. வேதங்கள் ஓதப்படத் தக்கனவாகும்.

**(ஆ) சமய வழிபாடு**

- இருக்கு வேதம் கூறும் வழிபாடு இயற்கை வழிபாடு.
- அக்கினி வழிபாடு சிறப்பிடம். யாக வழிபாடு முக்கியத்துவம். இருக்கு வேதத்தில் புரோகிதனாக விளங்கியவன் அக்கினி.
- பண்டமாற்றுமுறை வழிபாடு "நான் உனக்கு நெய் முதலிய ஆகுதிகளைத் தருகின்றேன் நீ எனக்கு வீரர்களான மக்களையும் பசுக்களையும் மழையையும் நீண்ட ஆயுளையுந்தா" என்பது வழிபாட்டின் குறிக்கோளாகவும் வேண்டுதலாகவும் அமைந்தன.
- வழிபடும் வேளையில் தாம் வழிபடும் தெய்வத்தை உயர்த்திப் போற்றும் மரபு காணப்பட்டது.
- ஒரு கடவுள் கொள்கை சிறப்பிடம் பெற்றது. பொருள்கள் பலவாகக் காணப்படினும் எல்லாம் சத்தியமான ஒரே பொருளின் வேறு தோற்றங்களே என்ற கொள்கை சமய வழிபாட்டில் காணப்படலாயிற்று.
- வழிபாட்டில் சோமயாகம், அஸ்வமேத யாகம், ராஜசூரியம் போன்ற யாகங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- ஒரு தெய்வத்திற்கு பல பெயர் சொல்லி வழிபடுதல் சிறப்புப் பெற்றிருந்தது. (சதருத்திரியம்)
- வழிபாட்டில் மந்திரங்களை உச்சரித்தல், அவிப்பொருள் வழங்குதல், இசை வழிபாடு.

**(இ) தத்துவ சிந்தனைகள்**

- இருக்கு வேதம் பத்தாம் மண்டலத்தில் தத்துவ சிந்தனைகள் பெருமளவு உள்ளன.
- கடவுள், ஆன்மா, உலகம் எனும் மூன்று பொருட்கள் பற்றிய இந்து சமய சிந்தனைகள் வேதங்களை மூலமாகக் கொண்டவை.
- பல தெய்வக் கோட்பாட்டுத் தத்துவம், ஒரு தெய்வக் கோட்பாட்டுத் தத்துவம் (ஏகம் சத்) பரம்பொருள் கோட்பாட்டுத் தத்துவம்.
- தத்துவம் சார் சூக்தங்களும் அவை கூறும் விளக்கங்களும். நாஸதீய சூக்தம், யமசூக்தம், புருஸசூக்தம் தத்துவ சிந்தனைகளைக் கொண்டது.
- ரிதம் தொடர்பான விளக்கம்.
- பிற்காலத் தத்துவங்களுக்கு மூலமானவை. உபநிடதங்களில் பிரமம், ஆன்மா, கன்மம், மறுபிறப்பு, உலகம் பற்றிய சிந்தனை வளர்ச்சி.

வினா - (3) இந்துக்களின் புராதன கல்விப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சங்களை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

(அ) வாழ்வியல்

(ஆ) அரசியற்கல்வி

(இ) கல்வி நிறுவனங்கள்

(அ) கல்வி பாரம்பரிய அறிமுகம் வேதகாலக் கல்வி குருகுலக்கல்வி பற்றிய விளக்கம்.

- உபநிடத தத்துவக்கல்வி.
- ஆன்மீக ஈடேற்றத்திற்கான கல்வி
- உலகியல் சார்ந்த கல்வி.
- இதனை பரவித்தியா என்றும் அபர வித்தியா என்று முறையே அழைத்தல்.
- இரசனையுடன் அறிவைப்பெறல் ஆன்ம விடுதலைக்கல்வி.
- ஓதல், ஓதுவித்தல் முதலிய ஆறு தொழிலும் ஏனைய குல முறை வித்தைகளும் வாழ்வியல் கல்வியாயிற்று.
- தனி மனித வாழ்வியல், குடும்ப வாழ்வியல் அறவழி சிந்தனைகள்.
- சமூக, நோக்கில் கல்வி தர்மம், ஒழுக்கம், ஒற்றுமை
- பொருளாதார நோக்கில் வணிகதர்மம்
- தொழிசார் கல்வி சமூக தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- அறம், பொருள், இன்பம், வீடு (புருடார்த்த நிலையில் கல்வி)
- குரு சீட பாரம்பரியம் பேணுதல்.

(4 புள்ளிகள்)

(ஆ) அரசியற்கல்வி முறையின் தோற்றம்.

- புராண இதிகாச பாரம்பரியத்தில் தோற்றம் பெறுதல்.
- ஆச்சிரமக்கல்வி முறை இராமாயணம், மகாபாரத உதாரணங்கள்.
  - போரியல
  - மருத்துவம்
  - சோதிடம்
  - அரச பரிபாலனம்
- அறிவுசார் கல்வி முறைகள்
  - தர்ம சாஸ்திரம்
  - அர்த்த சாஸ்திரம்
  - ஸ்மிருதிகள்
- வழிக்கல்வி முறை
  - வில்வித்தை
  - குதிரையேற்றம்
  - அஸ்வ சாஸ்திரம் (தேரோட்டம்)
  - பாணமேற்றம்
  - மல்யுத்தம்
  - வாள்பயிற்சி போர் வியூகமும் முறியடிப்பும்
- இலக்கியம், இலக்கணம், தருக்கம், கணிதம், வானியல், சோதிடம், சிற்பம், ஓவியம் இசை முதலிய கலைகள்.

(8 புள்ளிகள்)

(இ) நிறுவன ரீதியான கல்வி.

வனப்பிரதேச ஆசிரமங்களே முதல் நிறுவனக் கல்விமுறை உபநிடத மூலமாகவும், இதிகாச புராணமூடாகவும் ஆரம்பித்தல்.

- குப்தர்கால கல்வி நிறுவனங்கள்.
  - காசிட தாலந்தா
  - உஜ்ஜயினி
  - பாடலிபுரம்
  - வாரணாசி
  - சமயக்கல்வி
  - தட்சசீலம்
  - உலகியற்கல்வி
  - பாணிஷி
  - கௌடில்லியர்
  - சசகர்

  முதலிய சிறந்த அறிஞர் பங்களிப்பு.

- தமிழகத்தில் சித்தர் மரபுக்கல்வி, அறநெறிக்கல்வி, திறந்த வெளி ஆற்றங்கரை, மரநிழற் கல்விக் கூடங்கள், பல்லவர், காலக் கல்வி நிறுவனங்கள் சோழர் காலம் சதுர்வேதி மங்கலங்கள் பிராமணக் குடியிருப்பு கல்விக் கட்டமைப்புக்கள், ஆலயம் சார்ந்த கல்வி முறைகள், மடங்கள் ஆதீனங்களின் கல்விமுறை, நவீன கல்வி முறை, அந்நியராட்சிக் கல்விக்கூடங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகக் கல்விமுறைகள் சமயம், தத்துவம், வாழ்வியல், அறிவியல், ஆராய்ச்சிமுறை கல்வியாக வளர்ச்சி பெறுதல்.

(8 புள்ளிகள்)

**வினா - (4) இந்துக்களின் விக்கிரகக் கலை மரபினை வெளிப்படுத்தும் மூர்த்தமாக அமையும் அனந்தசயன மூர்த்தம். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.**

**(அ) அனந்தசயன மூர்த்த வடிவம்**

**(ஆ) அனந்த சயன மூர்த்த தத்துவச்சிறப்பு**

(அ)
- அனந்த சயனம் பொருள் விளக்கம் அறிதுயில் என்று தமிழில் பொருள் கோடல் இறைவன் முக்காலமும் உணர்ந்தவனாய் துயிலும் நிலை.
- ஆன்மா துயிலில் சொப்பனமுடையது இறை முத்தொழில் ஆற்றல் உடையது.
- பாற்கடலில் விஷ்ணு (பரம்பொருள்) ஆதிசேடன் மீது பள்ளிகொள்ளல்.
- அஷ்டநாக வகைகளில் நாகங்களில் ஒன்று.
- யோக நிலை நிலையில் அறிதுயில் கொள்ளல் வடிவம்.
- விஷ்ணு வடிவங்களில் சிறப்பானது அனந்த சயனம் படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலையும் உணர்த்தும்.
- பெருமாள் கோவில்களில் அரங்கநாதர், திருவரங்கர் யோகசயன மூர்த்தி, தேசாயி, பள்ளி கொண்ட பெருமாள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.

(ஆ)
- சங்கு போல வெண்மையான அனந்த சயனத்தில் யோக நித்திரை கொள்ளல்.
- வலது கால் நீண்டிருக்க இடதுகால் சிறிது மடக்கி இருக்கும்.
- இரு கரங்கள் ஒன்று தொடைமீது பொருந்தியிருத்தல் வலதுகை தலையணையாக கிரீடத்தை தழுவியிருக்கும். அதாவது மணிமுடியாகும். இது வைணவ சம்பிரதாயத்தில் முக்கியமாகும்.
- இடது கை உடலோடு இருக்க முழங்கை மடித்து கட்க முத்திரை தரித்திருக்கும்.
- கைத்தலத்திலிருந்து பெருவிரலை நீட்டி உள்முகமாக சிறிது வளைந்த நடுவிரலையும், அணி விரலையும் ஒன்றோடு ஒன்று இணைத்து முன்னோக்கி வளைந்து சாட்டுவிரல் சிறுவிரலையும் நிறுத்தி சிறுகணுவை வளைத்து பிடிக்கும் கை கட்க முத்திரை ஆகும்.
- கண்கள் யோக நோக்கில் இருக்கும். இது உயிர்கள் மீதான கருணையைக் குறிக்கும்.
- நீலவண்ணத்திருமேனி மஞ்சள் வஸ்திரம்அணிந்திருப்பார்.
- காலடியில் மகாலட்சுமி இருத்தல் அவருடைய காத்தல் தொழிலின் இச்சாசக்தியாக இருப்பார்.
- உந்திக் கமலத்தில் பிரமாவின் இருப்பு படைப்பைக் கண்காணிப்பவராக அமையும்.
- முத்தொழில் தத்துவமும் உலகரட்சகராகவும் சகல ஜீவராசிகளின் தோற்றம் நீரில் இருந்து தோன்றியதாக அல்லது நீருடன் தொடர்புடையதே படைப்பும் (தோற்றமும் ஒடுக்கமும் என்ற அடிப்படையில் மூல பரம்பொருள் பரந்தாமனே எனக் காட்டுவது.
- மாமல்லபுரம், காஞ்சி, திருநீர்மலை மூலவராக இத்திருமேனி உள்ளது.
- வேதவனம் அரங்க நாதர் திவ்விய ரூபமாக கருதப்படுகின்றமை.
- இலங்கையில் 7m நீளமும் 3m உயரமுடையதாக அழகிய தோற்றத்தில் பொன்னாலை வரதராசப் பெருமாள் உள்ளார்.
- இலங்கையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, கிழக்கிலங்கை, கொழும்பு போன்ற பிரதேசங்களில் அனந்த சயன மூர்த்தங்கள் காணப்படுகின்றன.

(20 புள்ளிகள்)

வினா - (5) 'இந்துக்களின் விக்கிரகக் கலை மரபினை உலகறியச் செய்வது சிவனின் நடராச மூர்த்தமே'. இக்கருத்தை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) நடராச வடிவத்தின் தோற்றப் பொலிவு

(ஆ) நடராச வடிவத்தினூடாக புலப்படும் தத்துவச் சிறப்புகள்.

(அ) நடராச வடிவத்தின் தோற்றப்பொலிவு

- *சிற்ப சாத்திர அளவை பிரமாணமுடன் எழில்மிகு நடனக்கோலம்.*
- *உத்தம தசதால அளவுப்பிரமாணம்.*
- *சமய வழிபாட்டில் மூர்த்தச்சிறப்பு.*
- *வலது திருவடி - ஊன்றிய கோலம் சிலம்பு - முயலகன் மீது இடது திருவடி - பாதம் சற்று குவிந்தநிலை.*
- *வீசு கரம்*
- *அபய கரம்*
- *உடுக்கை ஏந்திய வலதுகரம். (டமருகம்)*
- *அக்கினி ஏந்திய கரம்.*
- சூலம், கட்கம் (கோடரி), பாம்பு, மான் மழு தலையில் மண்டைஓடு, உமத்தம்பூ, கொக்கிறகு, கங்கை, முக்கண் தோடும் , குழையும்

- *(நாவுக்கரசர் தேவாரம்) (உண்மை விளக்கம்) கூற்றுக்கள்.*
  *"தோற்றம் துடியதனில் தோயுந் திதி அமைப்பில் ............"*
  *"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வையிற்................" சிறப்புற விளக்குதல்.*

*(10 புள்ளிகள்)*

(ஆ) நடராச வடிவின் தத்துவச் சிறப்பு.

- *ஐந்தொழில் தத்துவம்*
  - *உடுக்கை (டமருகம்) ஏந்திய கரம் - படைத்தல்*
  - *அபயகரம் - காத்தல்*
  - *அக்கினி வைத்த கரம் - அழித்தல்*
  - *ஊன்றிய திருவடி - மறைத்தல்*
  - *தூக்கிய திருவடி (குஞ்சிதபாதம்) - அருளல்*
- தூல, சூக்கும பஞ்சாட்சர தத்துவம் சிகராதி, நகராதி தத்துவம்
  - *ந – திருவடி சி*
  - *ம – திருவயிறு வ*
  - *சி – திருத்தோள் ய*
  - *வ – திருமுகம் ந*
  - *ய – திருமுடி ம*
- *முயலகன் - ஆன்மா*
  *பாம்பு - ஆணவம்*
  *முக்கண் - இச்சா சக்தி, கிரியா சக்தி , ஞான சக்தி*
  *சிலம்பு - பலவினைகள், நீக்கம்*
  *திருவாசி - ஓங்காரம்*
  *சடாமுடி - ஞானம்*

- *நடராச வடிவத்தின் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் பற்றிய ஆய்வாளர் கருத்துக்கும் கலாயோகி. ஆனந்த குமாரசாமியின் கருத்துக்கள்.*

*(10 புள்ளிகள்)*

**(இ) ஆகம என்ற சொல்லின் முப்பொருள் விளக்கம்.**

- ஆகமம் நாற்பாத பிரிவுகளுடையது. அதில் உள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்கள். கிரண ஆகமம், பதிப்படலம், பசுபடலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்றன விளக்கும் சித்தாந்த தத்துவங்கள்.
- சரியை, கிரியை, யோகம், ஞானம் சாதனங்கள் ஊடான சித்தாந்த விளக்கம்.
- குரு, லிங்க, சங்கம வழிபாட்டு முறைகள். சிவ சின்னங்களின் மகிமைகள்.
- அட்டமா சித்திகள் (யோகம்) பற்றிக் கூறுதல். பற்றி ஆகம விளக்கம்.
- மகோற்சவ கிரியைகள் பதி, பசு, பாச விளக்கமும் பஞ்ச கிருத்திய தத்துவமும். கொடி மரம் - பதி, கொடிச்சீலை - பசு, கொடிக்கயிறு - பாசம்

**(ஈ) ஆகமங்கள்**

சமயம் - (கிரியை பூர்வ, அபர நித்திய நைமித்திய ஆன்மார்த்த, பரார்த்த கிரியைகள். ஆலய அமைப்பு, விக்கிரகம், வழிபாடுகள் என்ற வகையில் முக்கியம் பெறல்.

சத்துவம் - முப்பொருள், பஞ்சகிருத்தியம், முத்தி ஆன்ம விடுதலை மார்க்கங்களை விளக்குதல்.

வாழ்வியல் - சடங்குகள், பண்பாட்டு மரபுகள்

கலை - விக்கிரகம், கட்டடம் இசை, நடனம், ஓவியம், சிற்பமூடாக முக்கியத்துவம் பெறுதல்.

**வினா - (8) இந்து சமய நம்பிக்கைகள் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழைமையும் கொண்டு விளக்குமாற்றை மேல் வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.**

**(அ) இலங்கையில் இந்து மத வரலாற்றைப் புலப்படுத்தும் சான்றாதாரங்கள்.**

**(ஆ) பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பு.**

**(இ) இதிகாசங்களூடாக ஈழத்தில் இந்துப்பண்பாட்டு வளர்ச்சி.**

**(அ) இலங்கையில் இந்துமத வரலாற்றைப் புலப்படுத்தும் சான்றாதாரங்கள்.**

- பாளி மொழி, தமிழ் மொழி என்பவற்றில் அமைந்த இலக்கியங்கள், சூளவம்சம், மகாவம்சம்.
- இந்திய உபகண்டச் செல்வாக்கு சமஸ்கிருத மொழி இதிகாசங்கள், பாரதம், இராமாயணம்.
- தமிழ் நூல்கள் - தேவாரப் பதிகங்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமந்திரம்.
- ஈழத்து நூல்கள், தட்சண கைலாச புராணம். வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை.
- புதைபொருட் சின்னங்கள் - ஈமத்தாழிகள், முருக வழிபாட்டு எச்சங்கள், நாகவழிபாடு சிலைகள், சிதைவுற்ற ஆலய எச்சங்கள், கல்வெட்டுக்கள்.
- பிறநாட்டார் குறிப்பு - பாகியன், பிலினி, திருமூலர்.

**(ஆ) பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பு.**

- கி.மு 3ம் நூற்றாண்டு முதல் ஆட்சி புரிந்த மன்னர்களும் 2ம் மகிந்தன் 2ம் சேஷன் துட்டகைமுனு போன்றோரின் பணிகள் அநுராதபுரகால அரசர் பணிகள்.
- அரண்மனையின் இந்துமதச் சடங்குகள்.
- அரண்மனை ஆலோசகராக இந்து புரோகிதர்கள் பணியாற்றியமை.
- சிவ என்ற அடைமொழிப் பெயர்கள்.
- புரோகிதர்களுக்குத் தானம் வழங்குதல்.
- சூளவம்சம், மகாவம்ச பாளிமொழி இலக்கிய சான்றுகள்.
- பாகியஷின் குறிப்புகள்.
- ஆலயம் அமைத்தல், புனரமைத்தல்
- துட்டகைமுனு தென்பகுதி கதிர்காமம். தேவேந்திர முனை உப்புல்லவன் ஆலய வழிபாடு.
- கணபதி, காளி, முருக வழிபாடு.

**வினா - (6) இந்துப் பண்பாட்டு மரபில் இசைக்கலை பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.**

- இசைக்கலை பற்றிய அறிமுகம்.
  இறைவன் (நாதப் பிரம்மம்) இசை வடிவினன் என்பது இசை ஐம்புல இன்பத்தை அளிப்பது பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்வது.
- இசைக்கலையின் தோற்றமும் தொன்மையும் வேத காலம் சாமவேதம்.
- இதிகாச, புராணங்களில் இசை, இராவணன் - சாமகானம், கிருஷ்ணர் புல்லாங்குழல்.
- இறை உருவங்களும், இசையும், கருவிகள் - உடுக்கு, மத்தளம் (தண்ணுமை) தம்புரா, வீணை, புல்லாங்குழல்.
- ஆலய கிரியைகளில் இசை மந்திர உச்சாடனம், இசைக்கருவி, பண்ணிசை, ஆகமக் கிரியையும், இசையும், கொடியேற்றம் நவசந்தி தோத்திரம்.
- தீர்த்த உற்சவமும் இசையும்.
- பேரிதாடனம், நொண்டி மேளம்.
- ஆலய வழிபாட்டில் மணி, சங்கு, சேமக்கலம், பறை, மத்தளம், மேளம், நாதஸ்வரம், தாளம்.
- பேரிகை, பஜனை, புராண படனம், ஏசல், ஊஞ்சல்.
- வரலாற்றுக்கால இசை வளர்ச்சி இசை நூல்கள்.
- சங்கீத மும்மூர்த்திகள்.
- பிற்கால கர்நாடக இசைமரபு.
- கூத்துக்கள், இசை நாடகங்கள், வழிபாட்டு மரபுகள், கண்ணகி வழிபாடு, திரௌபதி வழிபாடு.
- பாடசாலை, பல்கலைக்கழகம் இசை வளர்ச்சி.
- சபைகள் (வட.இல.சங்.சபை) நிறுவனங்கள் சபாக்களின் பங்களிப்பு, ஆலய உற்சவ நிகழ்வுகள்.

(20 புள்ளிகள்)

**வினா - (7) சிவாகமங்கள் இந்துப்பண்பாட்டை வளப்படுத்தியவாற்றை மேல் வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.**

**(அ) ஆகமம் என்பதன் பொருள் மரபு.**

**(ஆ) ஆலய கிரியைகளும் வழிபாட்டு முறைகளும்.**

**(இ) சைவ சித்தாந்த சிந்தனை மூலங்கள்.**

**(ஈ) ஆகமங்கள் பெறும் முக்கியத்துவம்.**

**(அ) ஆகமம் அறிமுகம்**

- அ - பசு, க - பதி, ம - பாசம் அதாவது பசு பாச முப்பொருள் உணர்த்தல்.
- ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம் மலத்தை நாசம் செய்வது சிவநாமத்தைக் கொடுத்து மோட்சமளிப்பது.

(ஆ)
- ஆன்ம ஈடேற்றம் கருதி திருவுருவ வழிபாட்டினையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்து விளக்குதல்.
- கோவில் அமைப்பு, அங்கு இடம் பெறும் கிரியைகள், அதனை ஆற்றுவதற்கான கிரியை விதிகள், மந்திரங்கள், யந்திரங்கள், உச்சாடன முறைகள் கிரியைக்கான திரவிய வகைகள், நிவேதன விதிகள் என்பவற்றை பூஜாநிதி படலமும் மந்திரவதார படலமும் விளக்கும்.
- கர்சணம் முதல் பிரதிஷ்டை, உற்சவம் பிராயசித்தமாகியன பற்றியும், நித்திய, நைமித்திய, காமிய கிரியை பற்றியும் விசேட விதிகளையும் கூறுதல்.
- கிரியைகள் பக்தியை வளர்ப்பதுடன் திரிகரண சுத்தியும் ஆன்ம ஈடேற்றமும் தருவன.
- விக்கிரக அமைப்பு, அளவுப் பிரமாணம் பிரதிமால இலக்கணம், ஆலய அமைப்பு அளவு பிரமாணம் பற்றிய விதிகளும் கூறப்படல்.

- *1, 2, 4. 6, 9* ஆம் பராக்கிரமபாகு மன்னர்களின் பணிகள்.
- தெவி நுவர கல்வெட்டு தேவேந்திரமுனைக் கல்வெட்டு.
- கஜபாகு மன்னனால் ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவியமை.

**(இ) இதிகாசங்களூடாக ஈழத்தில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி.**

- இராமாயணம், மகாபாரதம்
- கேது பூசித்த திருக்கேதீஸ்வரம்.
  மயன் எனும் தேவ தச்சன் மண்டோதரி வழிபட திருக்கேதீச்சரம் அமைக்கப்பட்டமை.
- ஈழவேந்தன் இராவணன் சிவபக்தன்.
  திருக்கேணேஸ்வரம் சாமகானம் பாடுதல், வழிபாடும் சக்தி வழிபாடும்.
- அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தமை. திருக்கேதீஸ்வரம் வழிபட்டமை.
- இராவணன் திருகோணமலையில் பிதிர்க்கடன் செய்தமை.
- இராமன் சிவவழிபாட்டில் ஈடுபட்டமை.

**வினா - (9) இந்து சமய நவீன சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய பிரம சமாசத்தின் பணிகளை மேல்வரும் அம்சங்கள் தொடர்பாக ஆராய்க.**

**(1) பிரம சமாசத்தின் பணிகளும் ராஜா ராம் மோகன் ராயும்.**

**(2) ஏற்படுத்திய சமூக மேம்பாடு.**

**(1) நவீன சீர்திருத்த இயக்கங்களின் தோற்றமும் பின்னணியும்.**

- கி.பி *1772* ராஜா ராமின் தோற்றம்.
- பல மதக் கோட்பாடுகளை உலகறியச் செய்தவர், பலமொழி அறிவு பெற்றவர்.
- ஆன்மீகத்தை அறிவியலுடன் இணைத்தல்.
- மரபுவழி இந்து நெறியை வளப்படுத்துதல்.
- பல சமய ஆய்வாளர் பகுத்தறிவை பொருத்தமுறப் பிரயோகித்தல்.
- நவ பாரதத்தின் தந்தை ராஜாராம்.
- உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்துதல்.
  *1815* இல் ஆத்மீக சபை ஆரம்பித்தவர். வேதாந்தக் கொள்கையை இலகுபடுத்தியமை.

**(2) ஏற்படுத்திய சமூக மேம்பாடு.**

- சமூக ஒருமைப்பாடு.
- உருவ வழிபாடு மறுப்பு.
- வேதக் கல்வி பரப்புதல்.
- பிராமணன் சஞ்சிகை வெளியீடு.
- பிரார்த்தனைக்கு முக்கியத்துவம்.
- உபநிடத சிந்தனைகளை வலுப்படுத்துதல்.
- பால்ய விவாகத்தடை.
- விதவை மறுமணத்தை ஊக்குவித்தல்.
- பெண் கல்விக்கு ஊக்கமளித்தல்.
- மேலைத்தேச கல்வியில் ஒளி பெற வேண்டுமென வலியுறுத்தியமை.

- *1, 2, 4. 6, 9* ஆம் பராக்கிரமபாகு மன்னர்களின் பணிகள்.
- தெவி நுவர கல்வெட்டு தேவேந்திரமுனைக் கல்வெட்டு.
- கஜபாகு மன்னனால் ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவியமை.

**(இ) இதிகாசங்களூடாக ஈழத்தில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி.**

- இராமாயணம், மகாபாரதம்
- கேது பூசித்த திருக்கேதீஸ்வரம்.
  மயன் எனும் தேவ தச்சன் மண்டோதரி வழிபட திருக்கேதீச்சரம் அமைக்கப்பட்டமை.
- ஈழவேந்தன் இராவணன் சிவபக்தன்.
  திருக்கேணேஸ்வரம் சாமகானம் பாடுதல், வழிபாடும் சக்தி வழிபாடும்.
- அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தமை. திருக்கேதீஸ்வரம் வழிபட்டமை.
- இராவணன் திருகோணமலையில் பிதிர்க்கடன் செய்தமை.
- இராமன் சிவவழிபாட்டில் ஈடுபட்டமை.

**வினா - (9) இந்து சமய நவீன சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய பிரம சமாசத்தின் பணிகளை மேல்வரும் அம்சங்கள் தொடர்பாக ஆராய்க.**

**(1) பிரம சமாசத்தின் பணிகளும் ராஜா ராம் மோகன் ராயும்.**

**(2) ஏற்படுத்திய சமூக மேம்பாடு.**

**(1) நவீன சீர்திருத்த இயக்கங்களின் தோற்றமும் பின்னணியும்.**

- கி.பி 1772 ராஜா ராமின் தோற்றம்.
- பல மதக் கோட்பாடுகளை உலகறியச் செய்தவர், பலமொழி அறிவு பெற்றவர்.
- ஆன்மீகத்தை அறிவியலுடன் இணைத்தல்.
- மரபுவழி இந்து நெறியை வளப்படுத்துதல்.
- பல சமய ஆய்வாளர் பகுத்தறிவை பொருத்தமுறப் பிரயோகித்தல்.
- நவ பாரதத்தின் தந்தை ராஜாராம்.
- உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்துதல்.
  1815 இல் ஆத்மீக சபை ஆரம்பித்தவர். வேதாந்தக் கொள்கையை இலகுபடுத்தியமை.

**(2) ஏற்படுத்திய சமூக மேம்பாடு.**

- சமூக ஒருமைப்பாடு.
- உருவ வழிபாடு மறுப்பு.
- வேதக் கல்வி பரப்புதல்.
- பிராமணன் சஞ்சிகை வெளியீடு.
- பிரார்த்தனைக்கு முக்கியத்துவம்.
- உபநிடத சிந்தனைகளை வலுப்படுத்துதல்.
- பால்ய விவாகத்தடை.
- விதவை மறுமணத்தை ஊக்குவித்தல்.
- பெண் கல்விக்கு ஊக்கமளித்தல்.
- மேலைத்தேச கல்வியில் ஒளி பெற வேண்டுமென வலியுறுத்தியமை.

வினா - (10) இந்துக்களின் தத்துவ சிந்தனை மரபில் சங்கரரது அத்வைதக் கோட்பாடு பெறும் சிறப்பினை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.

(1) பிரமம்

(2) ஆன்மா

(3) உலகம்

(4) முத்திக்குரிய வழிகள்

**(1) பிரமம்**

- *அத்வைதக் கொள்கை பற்றிய விளக்கம்.*
- *பிரமம் உண்மை ஏனைய இரண்டும்.*
  *தோற்றம் என்பதன் விளக்கம்.*
  *அதன் மூலமும்: ஒருமைவாத சிந்தனை தோற்றம் பெறல்.*
- *ஆன்மாவும், பிரமமும் ஒன்று / சேவஅத்வைதம் பிரம பரிபூரண வாதம் / ஏகான்மவாதம் விளக்கம்.*
- *பிரமம் உண்மைத்தன்மை.*
  *தேதிக் கொள்கை*
- *பிரமத்தின் இருநிலை*
  *(1) நிர்க்குண பிரம்மம்*
  *(2) சகுணப்பிரமம் விளக்கம்.*
- *"பிம்மம் சத்தியம் கத்மித்தியா ஜீவோ பிரம்ம ஏவ ந அபரா" பிரமம் உண்மைப் பொருளும் உலகும், ஒவ்வோர் ஆன்மா பரமமும் தான் வேறொன்று மல்ல எனும் பொருள் விளக்கம்.*

**(2) ஆன்மா**

- *ஆன்மாவின் இருவகை நிலை.*
  - *பரமாத்மா (உள்ளபொருள்)*
  - *ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)*
- *ஜீவாத்மா பலவாக தோற்றம் பெறுதல்.*
- *அவச்சேத வாதம், பிரதிவிம்ப வாதம்.*
- *அவித்தை விளக்கம் பிரமத்தை சீவனாக்குதல்.*
- *அஞ்சானத்தினாலேயே சீவன் தன்னை பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகின்றது.*

*(5 புள்ளிகள்)*

**(3) உலகம் பற்றிய கருத்துக்கள்.**

- *உலகம் உண்மை அல்ல அது தோற்றம்.*
- *உலகம் தோற்றமெனக் கூற வேண்டிய காரணம்.*
- *உலகின் நிலையற்ற தன்மை.*
- *விவர்த்த வாதக்கோட்பாடு (கயிறு பாம்பு)*
- *மாயைக் கோட்பாடு.*
- *மாயைக்கான பலவிதப் பொருள்.*
- *மாயை சொல் விளக்கமற்றது (அதிர்வசனீபம்)*

*(5 புள்ளிகள்)*

**(4) ஆன்ம விடுதலை. (முத்திக்குரிய வழிகள்.**

- *ஞானமே முத்திக்கு வழி.*
- *ஆன்மா அவித்தையிலிருந்து விடுபட்டு தன்மை பிரமமாக உணர வேண்டும்.*
- *பிரம ஞானத்தைக் கேட்டல், சிந்தித்தல் தெளிதல் ஆகிய படிமுறைகளை பின்பற்றல். நல் ஒழுக்கம், நியம நிட்டைப்படி வாழ்தல் என்பன அவசியம்.*
- *பிரமத்தை உணர்தல் அத்வைத அனுபவம் என்பது ஆகும்.*

வினா - (10) இந்துக்களின் தத்துவ சிந்தனை மரபில் சங்கரரது அத்வைதக் கோட்பாடு பெறும் சிறப்பினை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.

(1) பிரமம்

(2) ஆன்மா

(3) உலகம்

(4) முத்திக்குரிய வழிகள்

**(1) பிரமம்**

- அத்வைதக் கொள்கை பற்றிய விளக்கம்.
- பிரமம் உண்மை ஏனைய இரண்டும்.
  தோற்றம் என்பதன் விளக்கம்.
  அதன் மூலமும்: ஒருமைவாத சிந்தனை தோற்றம் பெறல்.
- ஆன்மாவும், பிரமமும் ஒன்று / சேவஅத்வைதம் பிரம பரிபூரண வாதம் / ஏகான்மவாதம் விளக்கம்.
- பிரமம் உண்மைத்தன்மை.
  தேதிக் கொள்கை
- பிரமத்தின் இருநிலை
  (1) நிர்க்குண பிரம்மம்
  (2) சகுணப்பிரமம் விளக்கம்.
- "பிம்மம் சத்தியம் கத்மித்தியா ஜீவோ பிரம்ம ஏவ ந அபரா" பிரமம் உண்மைப் பொருளும் உலகும், ஒவ்வோர் ஆன்மா பரமமும் தான் வேறொன்று மல்ல எனும் பொருள் விளக்கம்.

**(2) ஆன்மா**

- ஆன்மாவின் இருவகை நிலை.
  - பரமாத்மா (உள்ளபொருள்)
  - ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)
- ஜீவாத்மா பலவாக தோற்றம் பெறுதல்.
- அவச்சேத வாதம், பிரதிவிம்ப வாதம்.
- அவித்தை விளக்கம் பிரமத்தை சீவனாக்குதல்.
- அஞ்சானத்தினாலேயே சீவன் தன்னை பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகின்றது.

(5 புள்ளிகள்)

**(3) உலகம் பற்றிய கருத்துக்கள்.**

- உலகம் உண்மை அல்ல அது தோற்றம்.
- உலகம் தோற்றமெனக் கூற வேண்டிய காரணம்.
- உலகின் நிலையற்ற தன்மை.
- விவர்த்த வாதக்கோட்பாடு (கயிறு பாம்பு)
- மாயைக் கோட்பாடு.
- மாயைக்கான பலவிதப் பொருள்.
- மாயை சொல் விளக்கமற்றது (அதிர்வசனீபம்)

(5 புள்ளிகள்)

**(4) ஆன்ம விடுதலை. (முத்திக்குரிய வழிகள்.**

- ஞானமே முத்திக்கு வழி.
- ஆன்மா அவித்தையிலிருந்து விடுபட்டு தன்மை பிரமமாக உணர வேண்டும்.
- பிரம ஞானத்தைக் கேட்டல், சிந்தித்தல் தெளிதல் ஆகிய படிமுறைகளை பின்பற்றல். நல் ஒழுக்கம், நியம நிட்டைப்படி வாழ்தல் என்பன அவசியம்.
- பிரமத்தை உணர்தல் அத்வைத அனுபவம் என்பது ஆகும்.

- முத்தி இருவகைப்படும்.
  (1) சீவன் முத்தி - உடலுடன்
  (2) விதேக முத்தி - உடலமற்று
- யாவும் பிரமமமே என்று உணரும் நிலையில் வேறுபாடு நீங்கும் என்கிறார்.

(5 புள்ளிகள்)

**வினா - (11) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்து நாகரிக வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் தொடர்பாக மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.**

**(அ) சமயப்பணிகள்**

**(ஆ) கல்விப்பணிகள்.**

**(இ) பதிப்பாசிரியர் பணிகள்.**

**(ஈ) சமூகப்பணிகள்.**

**(அ) சமயப்பணிகள்.**

- சைவப் பிரசங்கங்கள் ஆற்றியமை.
- புராண படனங்கள் செய்தமை.
- ஆலயப் புனருத்தாரணங்கள் செய்தமை / செய்வித்தமை.
  திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நல்லூர்.
- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.
- ஆகமம் சார்ந்த நூல்கள் வெளியிட்டமை.
- பண்ணிசையை வளர்த்தமை.
- புறச்சமய கண்டனங்களை வெளியிட்டமை.
- சைவ சமயத்தில் பிறழ்வான நடவடிக்கைகளைக் கண்டித்து சீர்திருத்தியமை.
  **உ+ம்:** சைவ தூஷண பரிகாரம், யாழ்ப்பாணச் சமயநிலை.

(5 புள்ளிகள்)

**(ஆ) கல்விப்பணிகள்.**

- சைவ சமயச் சூழலில் கல்வி கற்பிக்கத்தக்கதாக பாடசாலைகளை நிறுவியமை.
  1848 வண்ணார்பண்ணை, 1864 சிரம்பரம், 1872 கோப்பாய், 1871 புலோலி.
- வித்தியாசாலை முகாமையாளர்.
- முதியோர் கல்விக்கு ஊக்கமளித்தமை.
- பெண் கல்விக்கு முன்னுரிமை.
- புராணபடனம், பிரசங்கம் மூலம் கல்வி.

**(இ) பதிப்பாசிரியர் பணிகள்.**

- சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலும் அச்சியந்திரம் நிறுவியமை.
- அகராதி (நிகண்டு) பதிப்பித்தல்.
- இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தமை.
- தருக்க நூல்கள் - தருக்க சங்கிரகம்
- தொகுப்பு நூல்கள் பதிப்பித்தல்
- அற நூல்களைப் பதிப்பித்தல்.
- சைவப் பாடசாலை நூல்களை பதிப்பித்தல்.
- செய்யுள் நடையை வசன நடையில் ஆக்கிப் பதிப்பித்தல்.
- பத்திரிகைத் துறைக்கு வித்திட்டமை.

**(ஈ) சமூகப் பணிகள்.**

- 1876, 1877 கஞ்சித்தொட்டி தருமம்.
- யாழ் கரையூர் பிரதேச கொலரா, பேதிநோய் பரவியபோது முன்னின்று செய்த பணிகள்.
- மத ஒழிப்புப் பிரசாரம்.
- சமூக வளர்ச்சிக்கான சொற்பொழிவுகள், கட்டுரைகள்.
- சுதேசிய எழுச்சிக்கு வித்திட்டமை.

- தேசிய அரசியல் பிரதிநிதியை தெரிவு செய்ய உதவியமை.
- சைவத்தமிழ் மாணவர் பரம்பரையை உருவாக்கியமை.

வினா - (12) வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை
(அ) கடவுட் கோட்பாடு
(ஆ) வழிபாட்டு முறை
(இ) சமூக நிலை
(ஈ) தத்துவ சிந்தனை

**(அ) கடவுட் கோட்பாடு**

இயற்கை சார்ந்த தெய்வ வழிபாடு. மண், விண், இடையுலகம் எனப்பிரித்து 33 தெய்வங்கள் வழிபட்டனர். இறுதியில் சத்தியமான உள்பொருள் ஒன்று என்ற நம்பிக்கை. பிரசாபதி பற்றிய பாடல். ஏகம் சத் விப்ரா பஃதா வதந்தி என்ற ஒரு கடவுட் கோட்பாட்டு வழிபாடு இடம்பெற்றது.

**(ஆ) வழிபாட்டு முறை**

யாகம், உபாசனை முறைகள் பிரதானமானது. வழிபாட்டின் பிரதான தெய்வம் அக்கினி எரியோம்பல் அவிப்பொருட்களை வழங்குதல், மந்திரங்களை உச்சரித்தல், பண்டமாற்று வழிபாடு, அக்கினியையே புரோகிதன் கண்கண்ட தெய்வமாக வழிபடப்பட்டமை, இம்மைச் செல்வங்களை வேண்டி தெய்வங்களை விழித்தும் தாம் வேண்டும் செல்வங்களை இரந்தும் வேண்டுதல், இசையுடன் பாடி வழிபடல், அதர்வ வேதத்தில் வீட்டுக் கிரியைகள், மாந்திரீக, வசியக்கிரியைகளும் இடம்பெறல்.

**(இ) சமூக நிலை**

அரசயில் நிலையில் ராஜா, விஸ்வபதி என மன்னன் அழைக்கப்படல். மன்னனுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்புபடுவதற்கும் ஆடையே மன்னனையும், மக்களையும் வேறுபடுத்தும். பொருளாதாரத்தை அளவிடுவது பசு. "அகன்யா" என அழைக்கப்பட்டு "கொல்லத்தகாதது" எனப்பட்டது. தர்மம் முதன்மை பெற்று வர்ணன் பாதுகாவலனாக குறிப்பிடப்பட்டான். குருகுலக் கல்வி முதன்மை பெற்றது. புருஷாக்தம் வர்ணக்கோட்பாட்டை விளக்கி சமூக உயர்வுக்கு அனைத்து வர்ணமும் அவசியமாகக் கருதப்பட்டது.

**(ஈ) தத்துவ சிந்தனை**

பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம், கன்மம், மறுபிறப்பு பற்றிய இந்து மெய்யியல் சிந்தனைகள் வேதங்களில் காணப்படல். நாஸதீய சூக்தம், யம சூக்தம், பிரபஞ்ச சூக்தம் என்பனவற்றில் தத்துவ சிந்தனைகள் காணப்படுகிறது.

வினா - (13) "திருக்கோயில் மரபின் சிறப்பு நூல்கள் ஆகமங்கள்"
(அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்.
(ஆ) திருக்கோயில் வழிபாடு
(இ) நுண்கலை
(ஈ) தத்துவம்

**(அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்.**

தொன்று தொட்டு வரும் அறிவு. ஆ,க,ம எனப்பிரிந்து பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் விளக்கமாக அமைவது. ஆ - சிவஞானம். க - மோட்சம், ம - மலநாசம் ஆன்மாக்களை மூடி இருக்கும் மலங்களை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை அருளும் சிறப்பு நூல்கள் ஆகமமாகும்.

**(ஆ) திருக்கோயில் வழிபாடு.**

திருக்கோயில் அமைப்பில் திருவுருவ வழிபாடு, திருக்கோயிற் கிரியை மரபு வழிபாட்டின் பயன்களை விபரிப்பது. நாற்பாதங்களில் கிரியாபாதம் கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தக் கிரியைகளை விபரிப்பது. நித்திய, நைமித்திய, காமியக் கிரியை விளக்கம்.

(இ) நுண்கலை

திருக்கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்பு, நுண்கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனக்கலைகளை விபரித்தல்.

(ஈ) தத்துவம்

ஆ + க + ம என்பது சைவசித்தாந்த முப்பொருள் கோட்பாட்டை விளக்குதல். சிவலிங்கம் பதி, நந்தி - பசு, பலிபீடம், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை விளக்குவது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களில் முறையாக ஒழுகும் போது முத்தியின்பத்தை பெற வழிகாட்டுவன.

வினா - (14) சோழர் காலத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு வளர்ச்சியினை பின்வரும் அடிப்படையில் பரிசீலிக்குக.

(அ) அரசர்களது பங்கும் பணியும்

(ஆ) சைவ வைணவ இலக்கியங்கள்

(இ) நுண்கலைகள்

(அ) அரசர்களது பங்கும் பணியும்

சோழர்கால மன்னர்கள் சைவநெறியில் தீவிர பக்தி உடையவர்கள். விஜயாலன் தொடக்கம் இராஜ இராஜசோழன், இராஜேந்திர சோழன், குலோத்துங்கன் போன்றோர்கள் சைவ அபிமானிகளாகி சமய வளர்ச்சியில் அருந்தொண்டு புரிந்தனர். சிவபாதசேகரன், திருநீற்றுச் சோழன் என்ற விருதுப் பெயர்கள் பெற்றவர்கள். அரச சின்னமாக நடராஜ சின்னத்தைப் பொறித்தனர்.

(ஆ) சைவ வைணவ இலக்கியங்கள்

சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்டன. திவ்விய பிரபந்தம் தொகுத்தல், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலியோர் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு போன்ற சைவ நூல்களை எழுதியுள்ளமை. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் போன்ற நுல்கள் திருவியலூர் உய்ய வந்த தேவராயனார், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரால் இயற்றப்பட்டமை. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவும் தோற்றம் பெற்றன. வைணவ பேரிலக்கியமான கம்பராமயணமும் தோற்றம் பெற்றது.

(இ) நுண்கலைகள்

கலைகளின் உன்னத வளர்ச்சிக்காலம் சோழர் காலம், கட்டடக்கலையோடு சிற்பம், ஓவியம், இசை, நடனம், விக்கிரகக் கலைகள் யாவும் வளர்ச்சி பெற்றன. விமான அமைப்புடன் கட்டடக்கலை வளர்ச்சி பெறல். திராவிடக் கலைப்பாணியின் உன்னத வளர்ச்சி நிலைகள் இசை, நடனம், ஒலியும் உன்னத வளர்ச்சி. இசைக்கலைஞர்கள், நடன மாதர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படல், நடன சிற்பங்கள், நடன ஓவியங்கள் வளர்ச்சி பெறல் வார்ப்பு விக்கிரகங்கள் வளர்ச்சி பெறல்.

வினா - (15) பிரமசமாசம் சமூக மேம்பாட்டிற்கு அரும்பணியாற்றிய நிறுவனம்" இக்கூற்றின் அடிப்படையில்

(அ) இராஜாராம் மோகன்ராய் வாழ்ந்த காலம்

(ஆ) பிரம சமாசத்தின் முக்கிய செயற்பாடுகள்.

(இ) பிற்காலச் செல்வாக்கு

(அ) இராஜாராம் மோகன்ராய் வாழ்ந்த காலம்

பிரித்தானியர் ஆட்சியில் அவர்களது பண்பாடு, கிறிஸ்தவம் மேலோங்கிய காலத்தில் 18ஆம் நூற்றாண்டில் 1774 இல் வங்காளத்தில் பிறந்தவர். சமயத்தின் பேரால் மூடநம்பிக்கைகள் மிகுந்திருந்த காலப்பகுதி. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற சூழ்நிலையில் சமயத்தின் உண்மை நிலையை நிலை நிறுத்தத் தோன்றியவர்.

**(ஆ) பிரம சமாசத்தின் முக்கிய செயற்பாடுகள்.**

*பரம்பொருள் ஒன்றே என்ற கோட்பாட்டை உபநிடத அடிப்படையில் விளக்குதல். மேலைத்தேயக் கல்வியில் இந்திய மக்கள் ஒளி பெற வேண்டும், உருவ வழிபாடு, சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைச் சட்ட ரீதியாக நீக்கல், சாதி வேறுபாடுகளைக் களைதல், உருவ வழிபாட்டை எதிர்த்தல், பால்ய விவாகம், சிசுக்கொலை, பலதாரமணம் என்பனவற்றை எதிர்த்து கிறிஸ்தவ மதக்கருத்துக்களை ஏற்றல், ஆங்கிலக்கல்விக்கு இடமளித்தல், பெண்கள் கல்வி பெறல், சொத்துரிமை வழங்கல் என்பனவற்றை துண்டுப்பிரசுரம், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் வெளியிட்டமை.*

**(இ) பிற்காலச் செல்வாக்கு**

*சமூகத்தில் காணப்பட்ட மூடப்பழக்க வழக்கங்கள் அர்த்தமற்ற சடங்குகள், சமயத்தின் பெயரால் சமூகத்தில் காணப்பட்ட தீய பழக்க வழக்கங்களை நீக்கி தெளிவு பெறச் செய்தல். உடன்கட்டை ஏறும் வர்க்கத்தை 1829 இல் அரச ஆதரவுடன் சட்ட ரீதியாக நீக்கினார். மத மாற்றம் நீக்கப்பட்டது. சம உரிமை வழங்கப்பட்டது. பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. அறிவியல் சிந்தனைகள் சமூகத்தில் மேலோங்கியமை.*

**வினா - (16) இந்து விக்கிரகக் கலையில் சிவ வடிவங்களில் ஒன்றினைத் தெரிவு செய்க.**

**(அ) தோற்றப் பொலிவு**

**(ஆ) தத்துவம்**

**(இ) முக்கியத்துவம்**

**(அ) தோற்றப் பொலிவு**

- *சிவ வடிவங்களில் நடராசர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், திரிபுரந்தர் ஒரு சில. விரும்பிய வடிவங்களைக் குறிப்பிடல்.*
- *நடராஜ வடிவம் பிரதானமானது. நடனக் கோலத்தில் சித்திரித்தல், பாடல்களில் வருணனைகள் திருநாவுக்கரசர் குனித்த புருவமும், மனவாசகம் கடந்தார்."தோற்றம் துடியதனில் தோயும் திதி...."*
- *தட்சணாமூர்த்தி குருமூர்த்தம். 4 வகைகளில் அமைக்கப்படும் யோக, ஞான, வீணா, வியாக்கியாணம் பெரும்பாலும் திருக்கோயில்களில் வியாக்கியான மூர்த்தமே காணப்படும்.*

**(ஆ) தத்துவம்**

*நடராசர் ஐந்தொழில் தத்துவ விளக்கம், பிரபஞ்ச இயக்கம் அங்க இலட்சணங்களும் தத்துவங்களை உணர்த்தும் முயலகன் - ஆன்மா, பாம்பு - ஆணவம், புலித்தோல். கோபத்தைக் கட்டுப்படுத்தல், முக்கண் - மூன்று சக்திகள். திருவாசி ஓங்காரத்துவம். சிலம்பு வினைகளை நீக்குவது நான்கு காரம் எல்லையில்லா ஆற்றல்.*

*திருவைந்தெழுத்தை உணர்த்தும் தத்துவம். ந - திருவடி, ம - திருவயிறு, சி - திருத்தோள் வா - திருமுகம் ய - திருமுடி.*

**தட்சணாமூர்த்தி -**

- *முப்பொருள் தத்துவத்தை உணர்த்துதல்.*
- *சின் முத்திரை மூலம் - முனிவர்களின் சந்தேகம் நீக்கல்.*
- *பெருவிரல் இறைவன் , சுட்டுவிரல் - ஆன்மா ஏனைய மூன்றும் மும்மலங்களை விளக்கும்.*

**(இ) முக்கியத்துவம்**

*சிவாலயங்கள் யாவற்றிலும் சிவ வடிவமான நடராஜ வடிவம் முதன்மை பெறல். யோகம், கூத்து, இசை போன்ற கலைகளைப் பெற விரும்புவோர் இம் மூர்த்திகளை உபாசித்தல். ஆனந்தத்தைப் பெறவும், கல்வியைப் பெறவும் இம்மூர்த்திகளை வழிபடுவதால் இன்பத்தையும், கல்வியையும் இலகுவாகப் பெற முடியும் என நம்பிக்கை காணப்படுகிறது.*

வினா - (17) "வேதாந்த வளர்ச்சியில் சமய தத்துவ இணைப்பே விசிட்டத் துவைத தத்துவமாகும்".

(அ) விசிட்டாத்வைதம் என்பதன் பொருளும் பிரமாண நூல்களும்.

(ஆ) பொருள் மரபு

(இ) ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள்

**(அ) விசிட்டாத்வைதம் என்பதன் பொருளும் பிரமாண நூல்களும்.**

விசிட்டாத்வைதம் என்பது விசிட்ட + அத்வைதம் என அமையும். விசேசங்களுக்கும் விசேடிக்கும் இடையிலான தொடர்பே விசிட்டாத்வைதம் விசேடனங்கள். ஆன்மாவும், உலகமும், விசேசிக்கிறவன் இறைவன். பிரமாண நூல்கள், பிரம சூத்திரம், பகவத்கீதை, உபநிடதம், வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகம், திவ்வியப் பிரபந்தம், ஸ்ரீ பாஷ்யம்.

**(ஆ) பொருள் மரபு**

இறைவன், ஆன்மா, உலகு என்பன தத்துவத்திரயக் கோட்பாட்டை முன்வைத்தல். இறைவன், ஆன்மா, உலகம் மூன்றும் தொடர்புடையன என்பதை சரீர சரீரி அல்லது அங்கம் அங்கித் தொடர்பின் மூலம் விளக்கல். இறைவனும் உண்மை, உலகமும் உண்மை என்பதைப் பால், தயிர் உதாரணம் மூலம் பரிணாம வாதத்தின் மூலம் நிறுவுதல். உயிர்கள் பல எனக்கூறி முப்பெரும் பிரிவாகக் கூறுதல், அப்பிரதக்சித்தி மூலம் உயிரும், உலகமும் நிலைபெற இறைவன் அவசியம் எனக் கூறுதல்.

**(இ) ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள்**

கன்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் சாரல், பக்தியிலும் பிரபக்திக்கு முதன்மை வழங்கல். பிரபக்தி மூலம் உடல் நீங்கிய பின்னர் அடையும் விதேகமுத்திக்கு முக்கியம். கொடுத்தல் விஸ்ணுவின் வைகுண்டத்தை அடைதலே முத்தியாகும்.

வினா - (18) "இந்து தத்துவ சிந்தனைகளின் சிகரம் சைவ சித்தாந்தமாகும்".

(அ) பிரமாணத்தின் சிறப்பு

(ஆ) இறைவனின் நிலைகள்

(இ) முத்தி பெற உதவும் வழிமுறைகள்

**(அ) பிரமாணத்தின் சிறப்பு**

சைவ சித்தாந்தம் சைவத்தின் முடிந்த முடிபு எனப்படும். வேதம் பொது ஆகமம் சிறப்புப் பிராமணமாகும். பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் என்ற முப்பிரமாணங்கள் மூலம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் கோட்பாடு விளக்கப்படுகின்றது.

**(ஆ) இறைவனின் நிலைகள்**

இறைவனுக்கு சொருப நிலை, தடத்த நிலை எனும் இரு நிலைகள் விளக்கல். சொரூப நிலை சிறப்பியல்பு, பதி பேரறிவானது. சுயம்பிரகாசமானதும், சிவம் எனும் பரம்பொருள் தானாக இயங்கும் தன்மையானது. வேதாந்திகள் பிரமம் என்ற சொல்லால் குறிப்பிடுவர்.

தடத்த நிலை என்பது குணம் குறிகளுள் கூடியது. சிவம் எனும் பரம்பொருள் ஆன்மாக்கள் மேல் கொண்ட பெருங் கருணை காரணமாக குணம் குறிகளோடு கூடி ஆட்கொள்ளும் நிலையாகும். இந்நிலையில் எண் குணங்கள், முத்திருமேனிகளைப் பெற்று ஐந்தொழில்களையும் புரிவார். சிவன் சக்தியோடு இணைந்து ஆன்மாக்களுக்கு முத்திப் பேற்றினை அருளுவார். மேற்கோள்கள் காட்டப்படல் வேண்டும்.

**(இ) முத்தி பெற உதவும் வழிமுறைகள்**

ஆன்மாக்கள் மலபந்தம் நீக்கி இறைவனை அடைதலே முத்தியாகும். முத்தியைப்பெற நாற்பாதங்கள், குருலிங்க சங்கம வழிபாடு, தீட்சை, திருக்கோயில் வழிபாடு போன்றவற்றில் ஈடுபடல். இவ்வழிகளை முறைப்படி பின்பற்றினால் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாத நிலைகளைப் பெற்று இறைவன் தாளினை அடையும். தாடலை போல் கூடல் முத்தியாகும்.